

ஏன் அவதரித்தார்கள்?
தாயுமானவர் - வள்ளலார் - வேதாத்திரி
மூவரும் ஒருவரே!
மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம்
இணைதளத்தில் banukumar.in

---

# ஏன் அவதரித்தார்கள்?

தாயுமானவர், இராமலிங்க வள்ளலார், வேதாத்திரி மகரிசி.

ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பழமை வேர்களைத் தமக்குள் வைத்துக் கொண்டு, எதிர்வரும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான -நாளை விதைகளையும்- தமக்குள் உயிர்ப் பித்தப்படி மகான்கள் அவதரிக்கிறார்கள்.

"அவதாரம்" என்ற வடமொழிச் சொல் "இறங்கி வருதல்" என்று பொருள்.

கடவுள்- மனித நிலைக்கு இறங்கி வந்து, அதாவது மனிதனாகப் பிறந்து, மனிதகுலம் உய்ய வழி காட்டுகிறார்கள்.

இது பற்றி பகவத் கீதை (4.7.-9), தேவி மகாகாத்மியம் ((11.54,55) போன்ற நூல்கள் -விபரமாகவும் சிறப்பாகவும் கூறுகின்றன.

இறைவன் எதற்காக இறங்கி வர வேண்டும்? ஏன் மனிதனாகப் பிறக்க வேண்டும்? தாம் இருந்த இடத்திலிருந்தே, இருக்கின்ற நிலையிலிருந்தே வழிகாட்ட- அவரலால் முடியாதா?

முடியும், ஆனால் "கருணை காரணமாக" அவர் இறங்கி வருகிறார் என்பதே -இதற்குரிய பதிலாகும்.

இதுகுறித்த பரம்பரைக் கதை ஒன்று உண்டு. ஒருமுறை அக்பர் சக்கரவர்த்தியிடம் அவரது அமைச்சர்களுள் முக்கியமான ஒருவரான பீர்பால் -அவதார தத்துவம் பற்றி கூறினார்.

---

அக்பர் அனைத்தையும் கேட்டுவிட்டு , நாம் மேலே கேட்ட கேள்விகளை- பீர்பாலிடம் கேட்டார். பீர்பால் உடனடியாகப் பதில் எதுவும் சொல்லவில்லை.

ஆம். கடவுள் இருந்த இடத்திலிருந்தே -நினைப்பதை நடத்துகின்ற ஆற்றல் பெற்றவர்தான்" என்று பட்டும்படாமலும் பதில் கூறினார்.

ஆனால் அவதார தத்துவத்தைச் சக்கரவர்த்திக்குச் சரியாகப் புரிய வைப்பதற்கான தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

ஒருநாள் சக்கரவர்த்தி, அவரது குடும்பத்தினர், மந்திரிகள், சேனாதிபதிகள் ஆகியோர் படகில்- உல்லாசப் பயணம் புறப்பட்டனர்.

பீர்பாலும் -அந்தப் படகில் இருந்தார். படகு -யமுனையின் நடுப்பகுதியில் சென்றது. அப்போது பீர்பால், சிறுவனாக இருந்த இளவரசனைத்- திடீரென்று தூக்கி நதியில் போட்டுவிட்டார்.

படகிலிருந்த அனைவரும்- வெலவெலத்து திகைத்து நிற்க, சக்கரவர்த்தி- மறுகணமே நதியில் குதித்தார். தொடர்ந்து -படைவீரர்களும் மற்றவர்களும்- நதியில் குதித்தனர்.

சிறிது நேரத்தில்- சக்கரவர்த்தி இளவரசனையும் மீட்டுக் கொண்டு- படகில் வந்து சேர்ந்தார். அந்த நேரத்தில்- நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை -நம்மால் ஊகிக்க முடியும். பீர்பால் உயிரிழப்பது உறுதி என்பதில் ஐயம் இல்லை.

ஆனால் அறிவாளியும் மேதையுமான பீர்பால்- ஏன் இத்தகைய ஒரு காரியத்தைச் செய்தார் என்பதை அறிய சக்கரவர்த்தி விழைந்தார்.

“சக்கரவர்த்தி என்னை மன்னிக்க வேண்டும்” என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார் பீர்பால்.

தொடர்ந்து, “இத்தனை சேனைகளும் படைகளும் இருக்க- இளவரசனைக் காப்பாற்ற தாங்கள் ஏன் நதியில் குதிக்க வேண்டும்? படை வீரர்களிடம் ஆணையிட்டுவிட்டு படகில் அமைதியாக உட்கார்ந்திருக்கலாமே?” என்று கூறினார்.

சக்கரவர்த்திக்கு எல்லாம் விளங்கியது. அவதார தத்துவத்தைத் தமக்கு உணர வைப்பதற்காகவே, பீர்பால் இத்தகையதொரு காரியத்தைச் செய்தார் என்பதைப் புரிந்து கொண்டார் அக்பர்.

இறைவன்- உயிர்கள் மீதுள்ள அளவற்ற கருணை காரணமாகவே அவதரிக்கிறார்.

மானுடத்தின் மீது கொண்ட கருணை காரணமாகப் பூமியில் அவதரித்தவர்கள் தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரியும்.

ஒரு சாதாரண மனிதனையும் -மகானையும் -அவதாரத்தையும் இனம்கண்டு கொள்ள வேண்டும்.

அவதார புருஷர்கள் -உலகிற்கு ஒரு செய்தியுடன் வருகின்றனர். அவர்கள் வாழும்போது ஒரு சிலர் மட்டுமே -அவர்களை அடையாளம் காண முடிகிறது.

ஆனால் அவர்கள் மறைந்தபின் அவர்களின் வாழ்வும் செய்தியும் புதுவேகத்துடன் பொங்கியெழுந்து, உலகையே ஆட்கொள்கின்றன.

ஆன்மீகம் மட்டும் அல்ல, சமயம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கலை, விஞ்ஞானம் என்று ஒவ்வொரு துறையிலும் அவை புகுந்து, அவற்றிற்கு ஒரு பரிணாமத்தைக் கொடுக்கின்றன.

தாயுமானவர், இராமலிங்க வள்ளலார், வேதாத்திரி மகரிசி ஆகியோர் வாழ்க்கை அத்தகைய ஒன்று. இன்று அவர்கள் பெயரால் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் காண்கின்ற யாரும்- இந்த உண்மையைப் புரிந்து கொள்ள இயலும்.

அது மட்டுமல்ல. அவதார புருஷர்கள் -தங்கள் செய்தியை மனிதகுலம் முழுமைக்கும் பரப்புவதற்காக- ஒருபுதிய பரம்பரையை உருவாக்கி விட்டுச் செல்கின்றனர்.

இன்று உலகெங்கும் அறியப்படுகிகின்ற “தாயுமானவர் பாடல்கள்– தாயுமானவம்” அன்று தாயுமானவரால், இரண்டு சீடர்கள் மூலம் ஆரம்பித்து வைத்த புதியதோர் ஆன்மீகப் பரம்பரையின் தொடர்ச்சிகளே.

அவ்வாறே, இன்று உலகெங்கம் அறியப்படுகின்ற “அருட்பெருஞ்சுாதி, தனிப்பெருங்கருணை” என்ற மந்திரமும், சன்மார்க்க சங்கங்களும் இராமலிங்க வள்ளலாரால் ஆரம்பித்து வைத்த புதியதோர் ஆன்மீகப் பரம்பரையின் தொடர்ச்சிகளே.

அவ்வாறே, இன்று உலகெங்கும் அறியப்படுகின்ற அறிவுத்திருக்கோயில் மற்றும் மனவளக்கலை மன்றங்கள் என்னும் இரட்டை இயக்கங்கள், அருட்தந்தை வேதாத்திரி மகரிசி, ஆயிரமாயிரம் பேராசிரியர்களை உருவாக்கி, அவர்கள் மூலம் ஆரம்பித்து வைத்த புதியதோர் -ஆன்மீகப் பரம்பரையின் தொடர்ச்சிகளே.

---

இந்த மூன்று மகான்களும் ஒருவரே எனபத. 476 ஆதாரங்களுடன் "மூவரும் ஒருவரே" என்ற தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டு - ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த ஆய்வின் முடிவுகளில் சுருக்கத்தை சிறிது சிந்தித்துப் பார்ப்போம். அந்த அவதாரங்களின் அருமை நமக்கு புரியும். மூவரும் ஒருவரே -ஆய்வு முடிவுகள்.

1. தாயுமானவர் வாழ்ந்த காலம் 1746 முதல்1744 வரையாகும். இராமலிங்க வள்ளலார் வாழ்ந்த காலம் 1823 முதல்1874 வரையாகும். வேதாத்திரியார் வாழ்ந்த காலம் 1911 முதல் 2006 வரையாகும்.
2. இந்த மண்ணில் தாயுமானவர் 38 ஆண்டுகளும், இராமலிங்க வள்ளலார் 51 ஆண்டுகளும், வேதாத்திரி மகரிஷி 96 ஆண்டுகளும் வாழ்ந்துள்ளனர்.
3. தாயுமானவர் மறைந்து 80 ஆண்டுகள் கழித்து வள்ளலார் அவதரிக்கிறார். வள்ளலார் மறைந்து 37 ஆண்டுகள் கழித்து வேதாத்திரியார் அவதரிக்கிறார்.
4. தாயுமானவர் அவதரித்து 206 ஆண்டுகள் கழித்து வேதாத்திரி மகரிஷி அவதரிக்கிறார். வள்ளலார் அவதரித்து 89 ஆண்டுகள் கழித்து வேதாத்திரியார் அவதரிக்கிறார்.
5. தாயுமானவர் திருச்சிராப்பள்ளியில் பிறந்தவர். இராமலிங்க வள்ளலார் பழைய தென்னார்க்காடு மாவட்டம் மருதூரில் அவதரித்தவர். வேதாத்திரியாரோ கூடுவாஞ்சேரியில் பிறந்தவர்.
6. தாயுமானவர் அமைச்சரின் மகனாகப் பிறந்தவர். வள்ளலார் சாதாரணக் குடும்பத்தில் அவதரித்தவர். வேதாத்திரியாரோ எளிய வறுமையுள்ள நெசவாளிக் குடும்பத்தில் தோன்றியவர்.

---

7. தாயுமானவர் முறையாக தமிழும் வடமொழியும் கற்றுப் புலமைப் பெற்றவர். வள்ளலாரும் வேதாத்திரியும் எந்தப் பள்ளிக் கூடத்திலும் முறையாக கல்வி கற்காதவர்கள்.
8. தாயுமானவர் அமைச்சராகப் பதவி வகித்தவர். வள்ளலார் சமயச் சொற்பொழிவு செய்தவர். வேதாத்திரியார் நெசவாளியாகவும், பின்னர் நெசவுத் தொழிலில் முதலாளியாகவும் இருந்தவர்.
9. மூவரும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்
10. மூவரும் சொல்லிய வண்ணம் நடந்து காட்டியவர்கள்.
11. தாயுமானவருக்கு சின்னஞ்சிறு வயதிலேயே அவரை ஆட்கோள்ள வந்த பரமாச்சாரியர் மௌனகுரு ஆவார். வள்ளலாருக்குள்ளே தாயுமானவர் இருப்பதால் ஆதி குருவாகிய தெட்சிணாமூர்த்தியே ஜோதி வடிவில் குருவாக அமைந்தார். தனக்கு பல குருமார்கள் அருள்பாலித்ததாக வேதாத்திரியார் குறிப்பிடுகின்றார். பாலகிருஷ்ண நாயக்கர் - வைத்திய பூபதி கிருஷ்ணராவ்-பரஞ்சோதி மகான்-வள்ளலார் போன்று எண்ணற்ற குருமார்கள் மகரிஷிக்கு கிடைத்தார்கள்.
12. மூவருக்குமே தங்களது ஞானப் பாதையில் பல சோதனைகளையும், வேதனைகளையும், சறுக்கல்களையும் கண்டு வென்றார்கள்.
13. உலக உயிர்கள் அனைத்தும் இன்பமாக, மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே மூவருடைய கொள்கை.
14. மலரினும் மண்ணிலும் விண்ணலும் நீரிலும் நெருப்பிலும் எங்கும் இறைக்காட்சியைக் காணும் தெய்வத் திருவுள்ளம்" வேதாத்திரியாருக்கு" அமைந்துள்ளது போலவே தாயுமானவர் பாலும் வள்ளலார் பாலும் அமைந்திருந்தது.
15. தாயுமானவர் 1452 பாடல்களையும் வள்ளலார் ஆறுதிருமுறைகளில் 5818 பாடல்களையும் வேதாத்திரியார் ஞானக்களஞ்சியத்தில் 1854 பாடல்களையும் பாடியுள்ளார்.

-----

16. தாயுமானவர் பாடிய பாடல்கள் "தாயுமானவர் பாடல்கள்" என்றும் வள்ளலார் பாடிய பாடல்கள் "திருவருட்பா" என்றும் வேதாத்திரி மகரிஷி பாடிய பாடல்கள் "ஞானக்களஞ்சியம்" என்றும் அழைப்படுகிறது.
17. தாயுமானவரின் 1452 பாடல்கள் மட்டுமே நமக்கு கிடைத்திருக்கின்றன. வள்ளலாரின் உரைநடைப் பகுதிகளும் நமக்கு கிடைத்திருக்கின்றன. ஆனால் வேதாத்திரி மகரிஷியின் உபதேங்களும், புத்தகங்களும் முழுவதும் நமக்கு கிடைத்திருக்கின்றன. வள்ளாலார் பாடல்கள் இணையதளத்தில் உலா வருகின்றன.
18. மூவரது பாடல்களையும் மனப்பாடம் செய்வது எளிமை.
19. சிந்து , கண்ணி முதலிய பாடல் வகைகளில் வள்ளலாரின் முன்னோடியாகத் தாயுமானவர் திகழ்கிறார்.
20. தாயுமானவர் 1452 பாடல்களில் எளிமையும் இனிமையும் நிறைந்து விளங்குவதைப் போன்றே, அருமையும் பெருமையும் நிறைந்து விளங்குகின்றன.
21. அதைப் போலவே வள்ளலாரின் திருவருட்பா பாடல்களிலும், வேதாத்திரியின் ஞானக்களஞ்சியத்திலும் அமைந்து இருப்பதை காணலாம். மூவரும் ஒருவரல்லவா?
22. பெரிய பெரிய தத்துவப் பொருள்களையெல்லாம், அனுபவப் பொருள்களையெல்லாம், அரும்பெரும் பொருள்களையெல்லாம், சிறு சிறு சொற்களில், சிறு சிறு சொற்றொடர்களில் எளிமையாகவும் இனிமையாகவும், தாயுமானவர் சொல்லி விடுகிறார்.
23. இவ்வருமை பெருமைகளை வள்ளலாரிடமும், வேதாத்திரியிடமும் காணப்பெறுவதில் வியப்பில்லை. மூவரும் ஒருவரல்லவா?
24. தாயுமானவர் பாடல்களில் தொட்ட இடமெல்லாம் வள்ளலார், வேதாத்திரி கருத்துகள் தட்டுப்படுகின்றன.

25. தாயுமானவர் விட்ட இடத்தில் வள்ளலார் தொட்டுத் தொடர்வது போலும், வள்ளலார் விட்ட இடத்தில் வேதாத்திரி தொட்டுத் தொடர்வது போல் ஒரு தொடர்பு இழையோடுகிறது. மூவரும் ஒருவரல்லவா?
26. தாயுமானவர் பாடல்களின் தாக்கம் திருவருட்பாவிலும் ஞானக்களஞ்சியத்திலும் பல இடங்களில் காணப்படுகிறதை நாம் பார்க்கலாம்.
27. தாயுமானவரும் வள்ளலாரும் பரசிவ வணக்கம் பாடினார்கள். வேதாத்திரியோ இறைவணக்கமாக பாடியுள்ளார்.
28. தாயுமானவர் எடுத்த எடுப்பிலேயே, முதற் பாடலிலேயே வென்று விடுகிறார். தாயுமானவர் பாடலின் தொடக்கம், முதற்பகுதியின் பெயர் "திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்'. திருவருட்பா ஆறாந் திருமுறையிலும் முதற்பதிகம் "பரசிவ வணக்கம்".
29. அங்கிங்கெனாதபடி எங்கும் விளங்கும் பரம்பொருளின் வணக்கமாகவே முதற் பாடலைப் பாடுகிறார் தாயுமானவர். " "பேருற்ற உலகிலுறு சமயமத நெறிஎலாம்" என்று வள்ளலார் பாடுகிறார். "ஆதிஎனும் பரம்பொருள் மெய்எழுச்சிப் பெற்று" என்று வேதாத்திரியார் பாடுகிறார்.
30. மூவரும் ஒருவராதலால் இறைவணக்கத்தில் மூன்று பாடல்கள் பாடி தாங்கள் மூவரும் ஒருவரே என்பதை மானுடத்திற்கு உணர்த்துகிறார்கள்.
31. தாயுமானவரின் "அங்கிங்கெனாதபடி" பாடல் வேதாத்திரி மகரிஷிக்கு பக்தி ஞான விசாரணைக்கு வித்தாக அமைந்தது. "வேதாத்திரி வாழ்ந்த கூடுவாஞ்சேரி கிராமத்தில், சனிக்கிழமைகளில், பஜனை பாடிக் கொண்டு, அதிகாலை நேரத்தில் தெருக்களைச் சுற்றி வருவதுண்டு. அந்தப் பஜனையில் பாடிய "அங்கிங்கெனாதபடி"

-----------------------------------------------------------------------------------------------------------------------

பாடல் தான் பின்னாளில், மகரிஷியின் அத்வைத்க கருத்துக்கு ஆதாரமாக அமைகிறது. அது தாயுமானவர் பாடிய முதல் பாடல்.

32. "எல்லாம் வல்ல தெய்வமது" என்ற வேதாத்திரியாரின் மகரிஷியின் இறைவழிபாட்டுப் பாடலில் தாயுமானவரின் *அங்கிங்கெனாதபடி தானேயாய பூரணமாய் நிற்கின்ற இறையியல்பை உணர்த்துகிறார்.*
33. பலவகைகளில் வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும் தாயுமானவரைப் பின்பற்றிப் பாடியுள்ளனர்.
34. வேதாத்திரியாரின் உடலுக்குள் வள்ளலார் புகந்தது அவரது 42 ஆவது வயதில். ஆனால் சிறு வயதிலேயே வேதாத்திரியார் தாயுமானவரை மானசீக குருவாக ஏற்றுக் கொண்டு பயன் பெற்றது தெளிவாகின்றது.
35. தாயுமானவரின் "அங்கிங்கெனாதபடி" பாடல் பள்ளிக்கூடப் பாடப்புத்தகத்தில் மனப்பாடப் பகுதியாகவும், வள்ளலாரின் "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" பாடல் மாணவர்களின் பாடப் புத்தகத்திலும் வீற்றிருக்கிறது. வேதாத்திரி மகரிஷி எழுதிய பேசிய அனைத்தும் வேதாத்திரியமாக 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் பாடமாக, பட்டயமாக, பட்டமாக, பட்டமேற்படிப்பாக, பயிற்றுவிக்கப்படுகிறது.
36. அறிவேதான் தெய்வம் என்பது வேதாத்திரியாரின் அடிப்படைக் கோட்பாடு. இறைவனை "அறிவான தெய்வமே சச்திதானந்த சிவமே" என்று பல இடங்களில் தாயுமானவர் சுட்டிச் செல்வதைக் காணலாம்.
37. மூவருமே சும்மா இருந்து சுகம் கண்டவர்கள்.
38. தாயுமானவர் மானுடத்தை ஆன்மீகப் பயணத்தில் பயணிக்க "சேரவாரும் ஜெகத்தீரே" என்றழைத்தார். வள்ளலார் "மரணமில்லா பெருவாழ்வு வாழலாம் வாரீர்" எனக் கூவினார். வேதாத்திரியோ "அன்பர்களே வாரீர்" என்று அழைத்தார்.

39. மகரிஷி வழங்கிய ஐவகைப் பண்பாடு புதியதொரு பண்பாடு உலகிற்கு வேண்டும். போதை, போர், புகை ஒழித்து அமைதி காப்போம். அவரவர் தம் அறிவின் ஆற்றலினால் உடல் உழைப்பால் வாழ்வோம் என்ற முடிவும், பொதுவிதியை, பிறர் பொருளை, வாழ்க்கைச் சுதந்திரத்தைப் பாதுகாத்து, உயிருக்கு அன்பு செய்து. உணவுக்கென உயிர்கொல்லா நோன்பும் கொள்வோம் என்னும் மகரிஷியின் பண்பாட்டுக் கொள்கையில் தாயுமானவர் நெஞ்சம் தவழ்வதைக் காணலாம்.
40. வெட்டவெளித் தத்துவத்தைப் பற்றி மூன்று மகான்களும் பாடியுள்ளனர். முன்னவர்களின் தத்துவங்களை பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் சுத்தவெளி தத்துவமாக தந்தவர் வேதாத்திரியார். நிலவுலகம் இருக்கும் மட்டும் இந்த சுத்தவெளி தத்துவமும் வாழும்.
41. அத்வைத தத்துவத்தை மூவரும் விரிவாகவும் விளக்கமாகவும் பாடியுள்ளனர்.
42. கருமையம் தூய்மை பெறத் தவமும் தற்சோதனையும் செய்து ஞானம் பெறவேண்டும் என்பார் மகரிசி. தாயுமானவரும் மெய்ஞானமே வழி என்கிறார்.
43. காந்தநிலை அறியாதார் கடவுள்நிலை அறியார் என்பார் மகரிஷி. இங்கு மகரிஷி குறிப்பிடும் அண்டவெளியில் அமைந்த காந்தநிலை-- தாயுமானவர் குறிப்பிடும் அருள்வெளி என்று கருதலாம்.
44. தாயுமானவர் வள்ளலார் உள்ளம் வேதாத்திரியாரின் இலக்கியங்களில் மையமாக அமைந்திருப்பதைக் காணலாம்.
45. சமயங்கடந்த மோனரசத்தை மூவருமே வலியுறுத்தினார்கள்.
46. தாயுமானவர், வள்ளலார் பாடல் தொடர்கள் வேதாத்திரியாரின் மனதில் எப்போதும் ஊடாடிக் கொண்டிருந்தன.
47. தாயுமானவர் , வள்ளலார் பாடல்களின் உள்ளடக்கத்தை வேதாத்திரியாரின் கவிகளிலும் காணலாம்.

48. தாயுமானவர் பாடல்களில் சில தொடரில் உட்பொருளை உணர்ந்துகொள்ள முடியவில்லை. அத்தகு உட்பொருள்களெல்லாம் வேதாத்திரியாரின் நூல் வழி விளக்கம் பெறுகின்றன.
49. பக்தியும் ஞானமும் இணைந்த தாயுமானவர் பாடல்களில் மகரிஷி வேதாத்திரியின் உள்ளம் தோய்ந்து இருந்தமையும், சில இடங்களில் தாயுமானவர். வள்ளலார் பாடல்களுக்கு விளக்கமாக அமைந்தமையும் வேதாத்திரியாரின் நூல்கள் வழி அறியலாம்.
50. தாயுமானவரும் வள்ளலாரும் சமரச ஞானிகளாகத் திகழ்ந்தவர்கள். தாயுமானவர் வேதாந்த சித்தாந்த சமரசம் பேசுகிறார்; சமயங்கடந்த மோன சமரசம் பேசுகிறார். வள்ளலார் ஆறந்த (ஷடாந்த) சமரசம் பேசுகிறார்; சமயங்கடந்த சமரச சுத்த சன்மார்க்கத்தைப் பேசுகிறார்.
51. தாயுமானவர் பற்பல கண்ணிகளைப் பாடியுள்ளது போன்றே வள்ளலாரும் பற்பல கண்ணிகளைப் பாடியுள்ளார்.

| தாயுமானவர் பாடிய கண்ணிகள் | வள்ளலார் பாடிய கண்ணிகள் |
|---|---|
| பராபரக் கண்ணி | பாங்கிமார் கண்ணி |
| பைங்கிளிக் கண்ணி | வெண்ணிலாக் கண்ணி |
| எந்நாட்கண்ணி | முறையீட்டுக் கண்ணி |
| காண்பேனோ என்கண்ணி | திருவடிக் கண்ணி |
| ஆகாதோ என்கண்ணி | பேரன்புக்கண்ணி |
| இல்லையே என்கண்ணி | |
| வேண்டாவோ என்கண்ணி | |
| நல்லறிவே என்கண்ணி | |
| பலவகைக் கண்ணி | |

52. *தாயுமானவர் பாடல்களின் தாக்கம் திருவருட்பாவில் பல இடங்களில் காணப்படுகின்றன. பல வகைகளில் வள்ளலார் தாயுமானவரைப் பின்பற்றிப் பாடியுள்ளார்*

---

53. தாயுமானவர் தாம் பெற்ற பரிபூரண நிலையை உலகத்தவரோடு பங்கிட்டுக் கொள்ள அழைக்கிறார். மகரிஷியும் தாம் பெற்ற இறை அனுபவத்தை எல்லோருக்கும் வழங்கத் துடிக்கின்றார். கேட்பவர்க்கெல்லாம் தருவேன் என்று தாம் பெற்ற இறை அனுபவத்தை குண்டலினி யோகத்தை எல்லோருக்கும் வழங்க அறிவுத் திருக்கோயில்கள், மனவளக்கலை மன்றங்கள் தோற்றுவித்து உதவுகின்றார்.
54. மூவருமே தன்னையறிந்த தவசீலர்களாக திகழ்ந்தார்கள்.
55. மானுடத்தை "கொல்லா விரதம்" மேற்கொள்வீர் என்று மூவருமே வலியுறுத்தினார்கள்.
56. தாயுமானவர் 60% விழுக்காடு வடசொற்கள் பயன்படுத்தியிருந்தாலும், மற்ற இருவருக்கும் குறைவில்லாமல் செந்தமிழ் வித்தகராக விளங்கினார்.
57. "சங்கர சங்கர சம்பு - சிவ, சங்கரசங்கர சம்பு" என்று தாயுமானவர் ஆனந்தக் களிப்புப் பாடுவது போன்றே வள்ளலாரும் சம்போ சங்கர என்று ஆனந்தக் களிப்புப் பாடுகிறார். வேதாத்திரியாரும் "பேரின்ப களிப்பு" பாடுகிறார்.
58. சுகவாரி எனற் தலைப்பில் தாயுமானவர் பாடியிருக்க, வள்ளலார் "இறைவனை ஏத்தும் இன்பம்" என்ற தலைப்புகளில் பாடி மகிழ்ந்துள்ளார். பேரின்ப ஊற்று என்ற தலைப்பில் வேதாத்திரியாரும் பாடியிருக்கிறார்.
59. தாமானவரும் வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும் சமரச ஞானிகளாகத் திகழ்கிறார்கள்.

---

60. தாயுமானவர் பெண்மையைச் சாடுகிறார். பிரம்மசரியம் தேவை என்கிறார். வள்ளலாரோ பெண்களைப் போற்றுகிறார். பெண்கல்வி, விதவை மறுமணம், மகளிர் சமத்துவம்,பெண்கள் கற்புநெறி, பெண்கள் முன்னேற்றம் பற்றி பதிவு செய்துள்ளார்..

61. மகரிஷி பெண்மையை முதன்மைப் படுத்துகிறார். பெண்களுக்கு இல்லற ஞானம் தேவை என்பதை வலியுறுத்துகிறார். இந்த ஒன்றைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றிலும் மூவரும் ஒத்த கருத்துடையவர்களேயாவர்.
62. தாயுமானவரின் பாடல்களிலிருந்து வள்ளலாரும் வேதாத்திரியாரும் அநேகக் கருத்துக்களை எடுத்தாண்டு ஆய்வு செய்துள்ளார்கள் என்பது மூவரின் படைப்புகளிலிருந்து தெரிகிறது.
63. மூலன் மரபில் வந்த தாயுமானவர் பாடிய பாடல்கள் தமிழுக்குப் புதுமையானவை. அவருக்குப் பின் வந்த வள்ளலார் மேலும் பல புதுமைகளைக் காட்டினார். வேதாத்திரியாரோ தமிழுக்கு எண்ணற்ற சொற்களையும் படைத்துள்ளார். சுத்தவெளி, பாய்மப் பொருள், அகத்தாய்வு, கருமையம், செயல்விளைவு, தள்ளல், கொள்ளல், குணநலம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.
64. வள்ளலாரின் தமிழ் வி(மி)ஞ்சும் தழிழாக இருக்கிறது. தாயுமானவர் ஏக்கப் பொருமூச்சோடு புலம்புவது போல் இருக்கிறது. மகரிஷியோ எதைச் சொன்னாலும் இது இப்படித்தான் என்று முடிந்த முடிவாகச் சொல்லிவிடுகிறார். தாயின் புலம்பலும் தந்தையின்முடிவும் நமக்குத் தேவைதானே!
65. வேதாத்திரி மகரிஷி குரலை நாம் இணையதளத்தில் கேட்டு மகிழலாம். தாயுமானவர் வள்ளலார் குரலை நாம் கேட்க கொடுத்து வைக்கவில்லை.
66. மூவரில் வேதாத்திரி மகரிஷியின் குரலை மட்டும் நாம் விடியோ ஆடியோ வில் கேட்டும் பார்த்தும் மகிழலாம்.
67. தாயுமானவர் தீடிரென்று மரணித்ததால் தனது லட்சியத்தை முடிக்க வள்ளலார் உடம்பில் புகுந்தார். வள்ளலாரும் தனது லட்சியத்தை முடிக்க வேதாத்திரி உயிரில் கலந்தார்.
68. தாயுமானவர் தொடங்கிய ஆன்மீக பயணத்தை வள்ளலார் தொடர்ந்தார் - வேதாத்திரியார் முடித்து வைத்தார்.

---

69. தாயுமானவர் மறைந்த இடம்- இராமநாதபுரம் லெட்சுமிபுரத்தில்- தாயுமானவர் ஆலயமாகவும், வள்ளலார் மறைந்த இடம்- வடலூரில் சத்தியஞான சபையாகவும், வேதாத்திரியார் மறைந்த இடம் - ஆழியாறில் அறிவுத்திருக்கோயிலாகவும் விளங்கி வருகின்றன.
70. வள்ளலார் தொடங்கிய சன்மார்க்க சங்கங்களும், வேதாத்திரியார் தொடங்கிய அறிவுத் திருக்கோயில்களும் மனவளக்கலை மன்றங்களும் ஊரேங்கும் ஞானக்கல்வியினை வழங்கி வருகின்றன. தாயுமானவரே இவர்கள் ஆன்மாவில் கலந்திருப்பதால் அவரது தத்துவங்களும் இம்மகான்கள் மூலம் பயிற்றுவிக்கப் படுகின்றன.

## அவதாரப் புருஷர்கள் மறைவதில்லை.

நாட்டில் எங்காவது குழப்பம் நேர்ந்தால் அதனைச் சீர்செய்வதற்கு முதலில் மன்னன் சிப்பாயை அனுப்புவான்., சிப்பாயால் அடக்க முடியாத நிலை என்றால், சேனாதிபதியை அனுப்புவான்.

அவனாலும் முடியாவிட்டால். மந்திரியை அனுப்புவான். நிலைமை கட்டுப்பாட்டை மீறுவதுபோல் தோன்றினால், தானே நேரடியாகச் சென்று நிலைமையை ஆராய்ந்து சீர்ப்படுத்தி வருவான்.

அப்படி அரசனே வருது போன்றதுதான் அவதாரம். சிப்பாய், சேனாதிபதி போன்றவர்கள்- சாதாரண மகான்கள்.நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறார்கள்.

அவதாரப் புருஷர்கள் மறைவதில்லை. வான்காந்தத்தில் இருந்து கொண்டு, மானுடத்தை வழிநடத்திச் செல்கின்றனர். அவர்கள் நம்மை வழிநடத்துகிறார்கள்.

பக்தி, முக்தி, ஞானம் . பணம், பதவி, உலக சுகங்கள் என்று எதை வேண்டுமானாலும் கேளுங்கள். கேட்பதை நீங்கள் பெறுவிர்கள்.

---

மானுடத்தின் பிரார்த்தனைகளை- அவர்கள் கேட்கிறார்கள். அவர்களை வழி நடத்துகிறார்கள். அவர்களின் ஆசைகளை நிறைவேற்றுகிறார்கள். இதயதாகத்துடன் அழைப்பவர்கள் அவர்களைக் காண்கிறார்கள்.

தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரி மகரிசியும் இன்றும் வாழ்கிறார்கள், நமது பிரார்த்தனைகளைக் கேட்கிறார்கள் என்பது நம்மில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகிறது.

நம்பிக்கை, வாழக்கையில் நமது முதல் தேவை அதுதான். முற்றிலும்- இன்பமயமாகவே வாழ்க்கை அமைவதில்லை. துன்பங்கள், கவலைகள், பிரச்சனைகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் இவை இல்லாத வாழ்க்கை இருக்க இயலாது.

உலகின் துணை எதுவும் உதவ முடியாத அந்த வேளைகளில்- நாம் அண்ணாந்து பார்ப்பதற்கு ஒருவர் வேண்டும்.

அவர் கருணைமயமானவராக இருக்க வேண்டும். நமது குற்றங்குறைகளைப் பாராமல்- நமக்குப் புகலிடம் அளிப்பவராக இருக்க வேண்டும்.

அத்தகைய ஒருவராக திகழ்கிறார்கள் தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரி மகரிசியும். இவர்கள் நமக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறார்கள்.